செ.வெ.எண்: 25 நாள்: 16.04.2019

# நாகப்பட்டினம் மாவட்டம்

**நடைபெறவுள்ள மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்.இ.ஆ.ப.,அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

28 – மயிலாடுதுறை பாராளுமன்ற தெர்குதிக்குட்பட்ட மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி, கும்பகோணம், திருவிடைமருதுார், பாபநாசம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மொத்தம் 1511 வாக்குசாவடி மையங்களுக்கான வாக்கு எண்ணும் மையம் மற்றும் வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கும் அறை மயிலாடுதுறை AVC கல்லுாரியில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மையத்தினை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலா் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்.இ.ஆ.ப.,அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது வாக்கு எண்ணும் மையம் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் வாக்கு எண்ணும் மையங்களில் அரசியல் பிரமுகர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் தனித்தனி பாதைகளில் செல்லும் வகையில் தடுப்பரண்கள் அமைக்க வேண்டும் என்பதால், அதற்கு தகுந்தாற்போல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறைகளில் தேவையான வசதிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள மையத்தில் செய்தியாளர்களுக்கென ஒதுக்கப்படவுள்ள அறை, தேர்தல் பார்வையாளர்களுக்கென ஒதுக்கப்படவுள்ள அறைகள் மற்றும் முதல் உதவி அளிப்பதற்கென ஒதுக்கப்படவுள்ள அறை ஆகியவைகளை பார்வையிட்டு அடிப்படை வசதிகள் அமைத்துத்தர தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்கள்.

மேற்படி ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலா் திருமதி.மு.இந்துமதி, சட்டமன்றத்தொகுதிக்கான உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட அரசு அலுவலா்கள் பலர் உடனிருந்தனா்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**